www.padippakam.com

# தலைவி

**இணைந்த கரங்கள்**
**பெண்கள் விழிப்புணர்ச்சி இணையங்களின் ஒன்றியம்**
**செய்திமடல்**

**செங்கோல் 1 மன்றம் 9** **ஜூலை 2003**

## தலைவியின் பார்வையில்............

ஈராக் நாட்டின் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு யுத்தத்தினைப் பற்றி முந்திய தலைவி இதழ்களில் எழுதப்பட்டது சகோதரிகளுக்கு நினைவிருக்கலாம். அப்போது, ஈராக் மக்களின் சக்திக்கு முன்னால் எந்த வல்லரசின் சக்தியும் தாக்குப் பிடிக்க முடியாது என்று பொருள்பட எழுதினோம். அதன்பின் அமெரிக்க இராணுவம் ஈராக்கைக் கைப்பற்றியபோது உங்களில் பலர் அதைப்பற்றி சிந்தித்திருப்பீர்கள். ஈராக்கிய மக்கள் தோற்றுவிட்டனரேயென்று முடிவு செய்திருப்பீர்கள். ஈராக் மண்ணில் அமெரிக்கப் படைகள் நிலை கொள்ளட்டும், அதன்பின் ஆண்டாண்டு காலமாக மனித குலம் கண்டு வந்த உண்மைகள் திரும்ப அமெரிக்கர்களாலும் உலக மக்களினாலும் உணரப்படும் என்று நாம் இருந்தோம். இந்த எண்ணம் மெய்யாக அதிக நாள் பிடிக்கவில்லை.

அதி நவீன ரக ஆயுதங்களுடன் உலகின் அதி பலம் வாய்ந்த வல்லரசு, கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக பொருளாதாரத் தடைகளை அனுபவித்து வரும் ஒரு வறிய நாட்டில் நிலைகொண்டென்ன, இன்று தவித்துத் தத்தளிக்கின்றது. மே மாதம் 1ந் திகதி ஈராக் யுத்தம் வெற்றிகரமாக முடிவுற்றிருக்கின்றது என்று அமெரிக்க ஜனாதிபதி பிரகடனம் செய்த காலம் தொட்டு இன்றுவரை ஐம்பதுக்கு மேற்பட்ட பிரிட்டிக்ஷ் அமெரிக்கப்படையினர் கெரில்லா வகை யுத்தத்திற்குப் பலியாகியிருக்கின்றனர். கடந்த ஜூன் மாதம் சராசரி ஒரு நாளுக்கு ஒரு வீரர் வீதம் அமெரிக்க இராணுவத்தினர் தமது உயிரைப் பறிகொடுத்திருக்கின்றனர். அவர்கள் பாக்தாத், பஸ்ரா, பலூஜா போன்ற நகரங்களில் வெளியே தலைகாட்ட முடியாதாம். எங்கேயும் எப்பொழுதும் அவர்கள் தலைகள் மறைந்திருக்கும் துப்பாக்கி கெரில்லா வீரர்களினால் குறிபார்க்கப்படுகின்றதாம். சதா டாங்கிகளுக்குள் உயிர் வாழ முடியுமா? மனிதராகவும் உலவ வேண்டுமே. மனிதராகத் தாம் உலவ முடியாது, சர்வ காலமும் பயந்து வாழ வேண்டியிருக்கின்றது என்பதை உணர்ந்திருக்கின்றது அமெரிக்க இராணுவம்.

வேறு வழியில்லாமல் மென்று விழுங்கி ஈராக்கில் பாரதூரமான பாதுகாப்புப் பிரச்சனை இருக்கின்றதுதான் என்று அமெரிக்க அரசாங்கம் ஒத்துக் கொள்ளத் தொடங்கி விட்டது. ஆரம்பத்தில் ஐம்பதாயிரம் படைவீரர்கள் போதும் என்று திட்டமிட்ட போதும் இன்று பாதுகாப்பு காரணமாக ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் வீரர்களை ஈராக்கில் குவித்துள்ளது. இப்படையைப் பராமரிக்க அதற்கு மாதாந்தம் சுமார் 390 கோடி டொலர்களைச் செலவிட்டுக்கொண்டிருக்கின்றதாம். இது எமது ரூபாய்களில் எவ்வளவு தெரியுமா? மாதம் 39,000 கோடி ரூபாய்கள்! எல்லாம் அமெரிக்க மக்களின் வரிப்பணங்கள். இது 1000 கோடி டொலர்களுக்கு அதிகரிக்கப்படும் என்று அஞ்சப்படுகின்றது. இதற்கெல்லாம் எங்கிருந்து நிதிகள் எடுக்கப் போகின்றோம் என்று அமெரிக்க அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொள்ளுகின்றனர். "ஈராக் மக்கள் எங்களைத் தமது விடுதலை வீரர்களாக மலர்களுடனும் இனிப்புக்களுடனும் வரவேற்பார்கள் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால், நிலைமை என்னவென்றால், உலகின் அதிசிறந்த பயிற்சி எடுத்த இராணுவ வீரர்கள் தாம் பொலிஸ்காரர்களாக மாறி ஒரு துப்பாக்கிச் சூடு பயிலும் மண்டபத்தின் நடுவில் இலக்குகளாக நிற்பதாக முடிந்திருக்கின்றது." என்று நகைச்சுவை பாதி ஆத்திரம் பாதியாக செனட்டர் டெட் கென்னடி பாதுகாப்பு செயலர் ரம்ஸ்வெல்டிடம் கூறியிருக்கின்றார்.

எந்த பலம் வாய்ந்த இராணுவமும் மக்களை ஆக்கிரமிக்கப் புகுமாயின் மக்களின் சக்திக்கு முன்னால் அது மண் கவ்வும் என்று எத்தனை முறை வரலாற்றில் நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் பேராசை கண்ணை மறைப்பதால், அதிகார மோகம் தங்களை ஆட்கொள்ளுவதால், மனிதர்கள் இந்தப் பாடத்தைச் சதா மறக்கும் பழக்கத்தில் இருக்கிறார்கள். எந்தக் கொடுங்கோலன் ஆட்சி புரிந்தால் என்ன அதற்காக ஒரு அன்னிய இராணுவத்தை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற உண்மையை அடிக்கடி மறந்து விடுகின்றனர். இதற்கு எங்கள் நாட்டிலும் சிங்கள இராணுவம், இந்திய இராணுவம் என்ற வடிவில் உதாரணங்கள் உண்டு. அட்டகாசமாக உள்ளே நுழையலாம். ஆனால் அங்கு தங்கினால் தோல்வி நிச்சயம். சமீப காலத்தில் நிகழ்ந்த பொங்குதமிழ் பிரகடனங்களும் இந்த விதியைப் பறைசாற்றுகின்றன.

ஆக்கிரமிப்பாளர்களுக்கு மறுபக்கம் பார்த்தால், சாதாரண மக்களும் இந்த விதியினை அடிக்கடி மறக்கின்றனர் என்றே தோன்றுகின்றது. அவர்கள் தமது சக்தியை உணராது ஆயுதங்கள் தாங்கிய எந்த சக்தியையும் கண்டு அஞ்சி நடுங்குகின்றனர். தமது சுதந்திரத்தை அவர்களுக்கே அடகு வைத்து விடுகின்றனர். வாய்பேசா ஊமைகளாகி விடுகின்றனர். இயற்கையைப் பார்த்து அதனிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள் சகோதரிகளே! அங்கு சிருக்ஷ்டிக்கப்பட்டிருக்கும் எந்தப் பலம் வாய்ந்த விலங்குக்கும் ஒரு பலவீனம் உண்டல்லவா? உதாரணமாக யானையின் தும்பிக்கைதான் அதற்குப் பலமும் பலவீனமுமாகும். தும்பிக்கையினால் எந்த விருட்சத்தையும் அது அடித்து வீழ்த்தலாம், ஆனால் அதே சமயம் ஒரு சிறு கொசு கூட அத்தும்பிக்கைக்குள் புகுந்து கடித்து யானையைக் கொன்று விடலாம். கடும் வெள்ளத்துக்கு பெரு விருட்சம் சாய்ந்தாலும் அதனடியில் இருக்கும் சின்னஞ்சிறிய நாணல் புல் நிமிர்ந்து நிற்கின்றதல்லவா? எங்கும் எப்பொழுதும் சமநிலை பேணப்படவேண்டும் என்ற நோக்கோடு இயற்கை என்ற மகோன்னத சக்தி உண்டாக்கிய விதி இது. யாருமே இந்த உலகை ஆண்டுவிட முடியாது. எவருக்குமே அடி சறுக்கும் வாய்ப்பு எப்போதாவது இருக்கின்றது. யாருக்கும் நாம் அஞ்சத் தேவையில்லை, நீதிக்கு மட்டுமே பயப்பட வேண்டும் என்கின்றாள் இயற்கை அன்னை.

இயற்கை கற்றுத் தரும் இந்த விதியை உணர்ந்து நாம் எமது மனங்களில் உள்ள அச்சங்களை அடித்து விரட்ட வேண்டும். எந்த வல்லரசானாலும் நாம் ஒன்று சேர்ந்து அதனை வென்றுவிடலாம் என்ற நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த சமூகத்தில் வேண்டிய மாற்றங்களை நாம் நினைத்தால் கொண்டு வரலாம். மனதில் சந்தேகங்கள், பயங்கள், அவநம்பிக்கைகள் இவையெல்லாம் மேகம் போல் மூடுவதனால்தான் நாம் இயக்கமற்ற பேதைகளாகின்றோம்.

**துணிந்தெழுங்கள், வெற்றி கொள்ளுங்கள்!**
**பெண்களின் எழுச்சி! சமூகத்தின் உயர்ச்சி!**


வாழ்த்துக்களுடன்,

ஆசிரியர்

தலைவிக்கான ஆக்கங்களும் கடிதங்களும் ஒவ்வொரு மாதத்தின் 10ந்தேதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

படிப்பகம்

**நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களையொட்டி விழுது நிறுவனம் இணைந்த கரங்கள் வலையமைப்பின் சார்பாக உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஐம்பது வீதம் என்ற கோரிக்கையை அடியொற்றி நடத்திய நாடளாவிய சுவரொட்டிச் சித்திரப் போட்டியில் பங்குகொண்ட இருவரினது ஆக்கங்கள்**



வதுர்தீன் மஸாய்தீன்
பைசல் நகர் கிண்ணியா 03
(நியாத் நகர்)




வண.ஜெ.தேவ அருட்செல்வம்
அமெரிக்கன் சிலோன் மிஷன்
கிரான் – மட்டக்களப்பு.

# இணைந்த கரங்களின் வேலை இன்றே ஆரம்பமாகிறது

டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் மகாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளக சுயாட்சி என்ற கோட்பாட்டின் கீழ் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை முன்னெடுப்பதற்கு முன்னோடியாக யுத்தத்தால் சீரழிந்துபோயுள்ள வட–கிழக்குப் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு இடைக்கால நிருவாக கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியுள்ளது என்று கூறியிருக்கின்றார். இக்கட்டமைப்பு வினைத்திறன் மிக்கதாகவும், வெளிப்படைத் தன்மை உடையதாகவும் கணக்கு கொடுக்கக்கூடியதாகவும், வடகிழக்கில் வாழுகின்ற சகல மக்கள் சமூதாயத்தினதும் நலன்கள் பாதுகாப்பதாகவும் இருக்க உறுதிப்படுத்தப்பட்டிருக்கப்பட வேண்டியுள்ளது என்றும் கூறியிருக்கின்றார். இத்தகையதொரு கட்டமைப்பில் விடுதலைப்புலிகளின் பங்களிப்பை சாத்தியப்படுத்துவதாயின், நாட்டின் சட்ட திட்டங்களுக்கு முரண்படாதவகையிலும் இதன் செயற்பாடுகள் இருக்க வேண்டியிருக்கின்றது. இதன் அம்சங்களாவன, யுத்தத்தால் சீரழிந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு வசதியாக அவர்களுக்கு தேவையான உடனடி அவசரத்தேவைகளை தரமான முறையில் வழங்குதல், மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை எல்லாம் முன்னெடுத்துச் செல்வதற்கு வசதியாக முஸ்லிம்களின் கரிசனைக்குரிய விசயங்களை எடுத்தாளும் முகமாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தூதுக்குழுவின் பங்களிப்பை உறுதிப்படுத்துதல் போன்றவையாகும்.

இணைந்த கரங்கள் பெண்களாகிய நாங்கள் இக் கட்டமைப்பில் தமிழ், முஸ்லிம் பெண்களின் பிரதி நிதித்துவம் ஐம்பது வீதமாக கட்டாயம் இருக்கப்பட வேண்டும் என்பதை சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு உரிமையுடன் தெரியப்படுத்தப்பட வேண்டும். இதற்கான தயாரிப்புக்களிலும் ஈடுபடவேண்டும். ஒவ்வொரு மாவட்ட பெண்கள் குழுக்களும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்கள் அடங்கிய பத்திரிகைச் செய்திகளை கிராம பெண்கள் குழு மட்டங்கள் தொடக்கம் பிரதேச பெண்கள் மாவட்டப் பெண்கள் வரை வாசித்து இது தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும்.

இதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்கள் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வேண்டும் என்று கிராமப் பெண்கள் தங்களின் நலனை மையமாக வைத்து செயற்பட வைப்பார்கள். இவர்களின் கலந்துரை யாடப்பட்ட கருத்துக்கள் ஏனைய மாவட்ட பெண்களுக்கு தலைவி செய்தி மடல் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ தெரியப்படுத்தப்பட வேண்டும். இது மட்டும் இன்றி வட–கிழக்கில் அபிவிருத்திப் பணிகளில் என்ன நோக்கில் முன்வைத்து நிறுவப்பட்டதோ அவை செயலில் உண்டா என்பதைப் பார்ப்பதற்கு மாவட்ட பெண்கள் அமைப்புக்களில் இதற்கான ஒரு குழு நியமிக்கப்பட்டு அது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அபிவிருத்தி நிருவாகத்துடன் மீளாய்வு கலந்துரையாடல் நடத்த வேண்டும். அத்துடன், அபிவிருத்திப் பணிகள் ஒவ்வொரு மாவட்ட பெண்கள் அமைப்புக்களையும் ஒன்றிணைத்து செயல்பட வேண்டும் என்பது கோரிக்கையாக விடப்பட வேண்டும்.

இதற்கெல்லாம் இணைந்த கரங்கள் பெண்கள் அமைப்பு முதலில் அரசியல் கட்சிகளுக்கும் அரசாங்கத்துக்கும் தெளிவாக அறிமுகப் படுத்தப்பட வேண்டும். இதை முதல் வேலையாக செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறான வேலைகளைச் செய்வதற்கு வடகிழக்கை சேர்ந்த இணைந்த கரங்களின் அங்கத்தவர்கள் சந்திக்க வேண்டியுள்ளது. மாவட்ட ரீதியான பெண்கள் அமைப்பக்களை பலமுள்ளதாக்கும் வேலைப்பாட்டிலும், மாவட்ட ரீதியாக அமைக்கப்படாத பெண்கள் அமைப்புக்களை அமைக்கும் செயற்பாட்டிலும் இறங்க வேண்டிய தேவை இருக்கின்றது. தொட்டம் தொட்டமாக சிறிய சிறிய பகுதியாக இறங்கினால் நான் மேலே குறிப்பிட்ட இப்படியான வேலைகளைச் செய்ய முடியாமல் போகிறது என்பதை வடகிழக்கு இணைந்த கரங்களை சேர்ந்தவர்களுக்கு அன்புடன் கூறுகின்றேன்..

திருமதி சந்திரா யவனராஜ்
தடாகம்
வாழைச்சேனை

www.padippakam.com



# பெண் விடுதலைப் போராட்டங்கள் கண்ட தோல்விகள்

எத்தனையோ அரச சார்பற்ற நிறுவனங்கள் கடந்த 15 வருடங்களாக பெண் விடுதலைக்காக வேலை செய்து வருகின்றன. நானும் இப்படியான நிறுவனத்தில் கடந்த எழு வருடங்களாக வேலை செய்து வருகின்றேன். என்னுடைய அனுபவத்தை சற்று சிந்தித்தேன். இவை இன்னும் பெண்களினது பிரச்சனையை உணர்ந்து வேலை செய்யவில்லை. இலங்கையில் பெண்களுக்கு விடுதலை வேண்டும் என்று உணர்ந்தால் நிறுவனங்களினதோ எந்தவிதமான அமைப்புக்களினதோ உதவியுமின்றி ஒவ்வொரு பெண்ணும் இந்த உரிமையை தான் அனுபவிக்க வேண்டும் என்று உணர்வு ரீதியாக இணைந்து போராட வேண்டும். இப்போராட்டத்தினூடாக வரும் "ஞான ஒளிதான்" பெண்களின் விடுதலையாக மாறிவிடும். இதைவிட்டு எத்தனையோ மாநாடுகளை இலட்சக்கணக்கான பணத்தை செலவிட்டு பெண்களின் நேரத்தை வீண் விரயம் செய்து நடத்தினாலும் மழைக்கு முளைத்த காளானின் வாழ்வு மாதிரியாகப் போய்விடும்.

கடந்த 15 வருடங்களாக பெண்கள் திட்டங்கள் இவ்வாறுதான் நடந்தேறின. ஒரு பெண் தன் அடிமை வாழ்க்கையை மாற்ற எவ்வளவுதான் முயற்சித்தாலும் இதற்கு ஏற்ற தளங்களும் தோழமை கொடுக்கும் நண்பர்களும் இன்றி இது நிறைவேறாது. ஆகவே இத்தளத்தையும் தோழமையையும் உருவாக்குவதே பெண் விடுதலையின் முதல் வேலையாக அமைய வேண்டும். எம்மில் 98வீதமான பெண்கள் வீட்டுவேலை , பிள்ளைப்பேறு, ஆண்களின் அட்டகாசக் கெடுபிடிகள், பாலியல் துசுஷ்பிரயோகம், வறுமை இவ்வாறான பிரச்சனைகளை தினமும் அனுபவித்து வருபவர்கள். நான் நினைக்கின்றேன் (பெண் விடுதலையைத் தேடித்தர) விடுதலைப் புலிகளின் மகளிர் அணியே தகுதியுடையவர்கள் என்று. காரணம் இவர்கள் தங்கள் உரிமையைக் கேட்கிறார்கள். தனியான ஒரு அரசை அமைத்து நடத்தும்போது அந்தத் தளத்தில் உரிமை கொடுக்கப்படாவிட்டால் அதற்காக வாதாடுவார்கள் இல்லையென்றால் போராட்டத்தை ஆரம்பிக்கத் தயங்கவும் மாட்டார்கள். இந்தப் போராட்டம் புதியதொரு போராட்டமாகவும் இவர்களுக்கு இருக்காது. பெண் உரிமைகளை வென்றெடுக்க பயிற்சியோ பணமோ இவர்களுக்குத் தேவையிருக்காது. ஆகவேதான், அரசியற் கருத்தரங்குகள் செய்வதன் மூலமாக கிராமப்பெண்களைத் தயார் படுத்தலாம் என்று நினைக்கின்றேன்.

யாராவது இதுவரைகாலமும் பெண்களுக்காக வேலை செய்து பெண் சமூகத்தின் மத்தியில் விடுதலைப் போராட்டத்தில் வரலாறு படைத்த சம்பவங்கள் ஏதேனும் இலங்கையில் உண்டா? இதனால்தான் அரசுசாரா நிறுவனங்களின் பெண்கள் திட்டங்கள் ஒரு கேள்விக் குறியாயுள்ளது. நான் இவ்வாறு எழுதியதனால் பெண் விடுதலைக்குப் பொருத்தமில்லாத பெண் என்று அர்த்தமில்லை. நம்மால் தோல்வி கண்ட விடயங்களை ஆராய்வதன் மூலமாகத்தான் புதிய சிந்தனையை பெற முடியும்.

சந்திரா யவனராஜ்
தடாகம் பிரதான வீதி, கோரகல்லிமடு

# பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான தொந்தரவு அதிகாரம் சார்ந்தது

பாலியல் தொந்தரவு என்பது பாலியல் விருப்பம் பற்றியதன்று. அது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலுள்ள அதிகார அசமத்துவத்தைப் பிரதிபலிக்கும் உறவு முறையில் ஏற்படுமொன்றாகும். இங்கு வழமையாக ஆக்கிரமிப்பாளர் ஓர் ஆண் ஆவார். தனது அதிகார பூர்வமான நிலையைப் பயன்படுத்தி ஒரு பெண்ணுக்கு அல்லது பெண்களுக்குப் பாலியல் ரீதியான தொந்தரவுகளைக் கொடுக்கின்றார். பாலியல் தொந்தரவு கல்வி நிலையங்களிலும்கூட இடம்பெறுகின்றது.

உதாரணமாக: மாணவருக்கும், பேராசியருக்கும் இடையிலான அதிகார அசமத்துவத்தின் விளைவாகப் பேராசிரியர் தனது அதிகார நிலையைப் பயன்படுத்தி மாணவருக்குத் தான் வழங்கும் சிறந்த தரச் சித்திகளுக்கு கைமாறாக அவர்களிடமிருந்து பாலியல் ரீதியான சலுகைகளை வேண்டி நிற்க முடியும். அதேபோல் வேறுபட்ட விதமாக பாலியல் தொந்தரவு வீதிகளிலும், பகிரங்கப் போக்குவரத்திலும் நிகழ்கின்றது. இங்கு பெண்கள், ஆண்களின் ஆபாசமான கருத்து வெளிப்பாடுகள், வெறுக்கத்தக்க அணுகுமுறைகள் என்பவற்றை எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

பாலியல் தொந்தரவானது, வெறுக்கத்தக்க அல்லது மனதுக்கு இதமற்ற சூழலை ஏற்படுத்தும் வார்த்தைகள், செயல்கள், படங்கள் ஆபாச சினிமாக்கள் அல்லது குறியீடுகளின் உபயோகம் என்பவற்றைக் கொண்டமையலாம். உணவு உட்கொள்ளுதல் சார் ஒழுங்கீனங்கள், உளச்சோர்வு, உறக்கமின்மை, மதுபோதை வஸ்த்துக்கள் என்பவற்றுக்கு அடிமையாதல் என்பன பாலியல் தொந்தரவின் விளைவுகள் சிலவாகும்.

பெண்கள் தாம் தொழில் பார்க்கும் இடங்களில் பாலியல் தொந்தரவு தொடர்பான குற்றச்சாட்டுக்களைக் கொண்டு செல்ல, ஆணைக் குழுக்களையும் ஒழுக்க வழிகாட்டிகள் முதலியவற்றையும் அமைத்துத் தருமாறு கேட்க உரிமை உடையவர்கள். இதற்கும் நீதி வழங்கப்படவில்லை எனக் கருதுவாராயின் அவர் நேரடியாக நீதி மன்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கு மாறாக சில வேளைகளில் நீதி மன்றங்களும் பெண்கள் கவர்ச்சியூட்டும் உடைகளை அணிதல் பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தத் தூண்டுவன எனும் தப்பான கருத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. பாலியல் தாக்குதல் என்பது சட்டத்தின் கீழ், வன்புணர்ச்சியாக அமையாத எத்தகைய பாலியல் தாக்குதலையும் குறிக்கும். உதாரணமாக, ஒரு பெண்ணுக்கு ஆத்திரமூட்டும் வகையான மறைமுகப் பாலியல் அவதூறு, வெறுக்கத்தக்க பாலியல் தொந்தரவாக கணிக்கப்படலாம். உடல் ரீதியான பாலியல் அணுகுதலும் அவ்வாறே அமையும். பாலியல் ரீதியான தண்டனை குற்றப் பணத்துடனோ அல்லது ஐந்து ஆண்டு வரையான சிறைவாசமாகவோ முடியும். இதனுடன் நீதவான் நட்ட ஈட்டையும் வழங்குமாறு விதிக்க முடியும்.

அநேக பெண்கள் வேலைத்தளங்களில் ஆண்களின் தயவில் தமது நிலைகளை வகித்து வரக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். மரபு ரீதியாக ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் வேலைத் தளங்களில் பெண்கள் மேலும், மேலும் நுழையும் போது பாலியல் தொந்தரவுச் சம்பவங்கள் அதிகரிக்க முடியும். அவற்றைத் தடுக்குமுகமாக தொழில் நுட்பங்கள் அமைக்கப்படுதல் இன்றியமையாததாகும்.

1993ம் ஆண்டு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பெண்கள் பட்டயத்தின் கீழ், (Women's Charter) பாலியல் தொந்தரவு போன்ற பாலியல் ரீதியான வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்காக கட்டுப்பாட்டினை அமுல்படுத்த இலங்கை அரசுடன் சேர்ந்து பெண்களாகிய நாமும் முன்வரவேண்டும். ஆம் சகோதரிகளே இது மிக முக்கியமான பெண்ணுரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினையே.

ஏறாவூர் முஸ்லிம் மேம்பாட்டு அமைப்பு,
முஸம்மிலா முஸ்தபா,
இல.: 104யுஇ வாசிகசாலை வீதி, ஏறாவூர்-01

# ஈராக்கில் அமெரிக்கப் படைகளின் ஆக்கிரமிப்பு தனியே முஸ்லிம் மக்களின் பிரச்சனையா?

ஈராக்கில் அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தினை முன்னெடுத்த காலந்தொட்டு தலைவி செய்தி மடல் இந்தப் பிரச்சனையை எடுத்தாண்டு வந்திருக்கின்றது. உலகமயமாக்கலின் போக்கில், உலகெங்கும் தனது பொருளாதார மேலாதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்க வல்லரசு நிகழ்த்தும் இராணுவ நாடகம் இது. இதன் வெற்றி தோல்விகள் மனித குலத்தின் வருங்காலத்தையே தீர்மானிக்கப் போகின்றது என்று கூறினால் மிகையாகாது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் ஈராக் பிரச்சனையைப் பற்றித் தனியே முஸ்லிம் மக்கள்தாம் தமது எதிர்ப்பினைக் காட்டியதை நாம் கண்டோம். ஏன், தலைவி பத்திரிகையிலும் ஒரு முஸ்லிம் சகோதரிதான் இதைப் பற்றி எழுதியிருந்தார். இது முஸ்லிம் மக்களின் பிரச்சனை என்றா தமிழ் மக்கள் நீங்கள் வாளாவிருந்தீர்கள்? ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் ஆசியாவிலும் ஈராக் யுத்தத்தை எதிர்த்துக் கூடிய கோடானுகோடி மக்கள் என்ன முஸ்லிம் மதத்தினைச் சார்ந்தவர்களா? இல்லையே. அவர்கள் இது தங்கள் எதிர்காலத்தைப் பற்றியது. சுதந்திரத்தையும் ஜனநாயத்தையும் பற்றியது என்பதனாலேயே இதனை ஆக்ரோஷமாக எதிர்த்து நின்றார்கள். மனித வரலாறு காணாத மாபெரும் மக்கள் ஊர்வலங்கள் எங்கும் நடத்தப்பட்டன. ஐயகோ, ஈழத்து மக்கள் இந்த மக்களோடு மக்களாக இணைந்து தாமும் வரலாறு படைக்கத் தவறி விட்டனர்.

முஸ்லிம் மக்களும்கூட ஈராக் பிரச்சனையை மனித மாண்பினைப் பற்றிய, உலக மக்களுக்கான நீதியைப் பற்றிய பிரச்சனையாகப் பார்க்கவில்லையென்றே தோன்றுகின்றது. அவர்களும் முஸ்லிம் தேசியவாதத்தின் வெளிப்பாடாகவே தமது எதிர்ப்புக்களையும் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறாக, பிளவுண்ட கண்ணோட்டங்களைக் கொண்டு அரசியல் நடவடிக்கைகளை நாம் கைக்கொள்ளுவதனாலேயே முன்னேற வழிதெரியாது அல்லாடுகின்றோம். காலங்காலமாக வன்முறையில் சிக்கித் தவிக்கின்றோம். நாம் எப்பொழுதுதான் எமது குறுகிய மனப்பான்மையிலிருந்து மீளப் போகின்றோம்?

படிப்பகம்

www.padippakam.com



# போர்க்களத்தில் எதிரிகள், பெண்களைப் பின்தள்ளுவதில் நண்பர்களா?

பெண்களின் அந்தஸ்திற்கான ஐ.நா ஆணைக்குழு ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் ஐ.நா தலைமைவலுவலகத்தில் கூடுவது சகோதரிகள் பலருக்கும் தெரிந்திருக்கும். பெண்களுக்கு அவசியமான கொள்கைகளை சகல நாடுகளும் அனுசரிப்பதை வலியுறுத்துவதற்கும், அவ்வாறு வாக்களித்தபடியே அவை செயற்படுத்துகின்றனவா என்று கண்காணிப்பதற்கும் இது தொழிற்படுகின்றது. கடந்த மார்ச் மாதம் இந்த ஆணைக்குழு 15 நாட்கள் கொண்ட தனது 47வது அமர்வினை முடித்துக் கொள்ள ஒரு அரை மணிநேரம் இருக்கும்போதுதான் இந்த அதிர்ச்சியான சம்பவம் நிகழ்ந்தது.

ஈரானிய பிரதிநிதி, எகிப்து, சூடான் நாட்டுப் பிரதிநிதிகளின் ஆதரவோடு எழுந்து நின்று ஆணைக்குழுவின் அறிக்கையின் ஒரு பந்தியில் குறிப்பிடப்பட்டவற்றிற்கு தனது எதிர்ப்பினைத் தெரிவித்தார். அந்தப் பந்தியில், பெண்களுக்கெதிரான சகல விதமான வன்முறை களையும் கண்டிப்பதாகவும் அதனை இல்லாதொழிப்பதற்கு மத நம்பிக்கைகள், சடங்குகள், பாரம்பரியங்கள், பண்பாட்டு வழக்கங்கள் போன்றவற்றைத் தடையாகக் காட்ட முடியாதென்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. சரி, ஈரானின் ஆட்சேபணையைக் குறித்துக் கொள்ளு கின்றோம் என்று கூறியும் அவர் அடங்கவில்லை. அந்த வசனம் அகற்றப்படவேண்டு மென்று சாதிக்க ஆரம்பித்தார். அமர்வின் இறுதிக்கட்டம் ஆகையால் வேறு வழியின்றி இந்த வசனத்தை உலக நாடுகள் உடன்பாடு காணாத வசனமாக ஆணைக்குழு எழுதி முடித்தது. ஆனால் இந்தக் கோட்பாடு 1995ல் நடந்த பீஜிங் மாநாட்டில் சகல நாடுகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். இன்று அதை மீளப் பரிசீலிக்க வேண்டிய துரதிர்ஷ்ட நிலைமைக்கு ஆளானோம்.

கடந்த இரு ஆண்டு காலங்களாக அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் இதையே செய்து வந்திருக்கின்றது. சகல நாடுகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, ஏன், அமெரிக்க அரசாங்கமே கைச்சாத்திட்ட ஒப்பந்த ங்களையே தான் கிழித்திருக்கின்றது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு ஆதரவான தனது கையொப்பத்தினை அழித்தது. உலகின் சுவாத்திய மாற்ற ஒப்பந்தத்துக்கு கைச்சாத்திட மறுத்தது. என்னதான் உலகத்தின் சுவாத்திய நிலைமை மாறினாலும்கூட, தான் அதே அளவில்தான் எரிபொருளை நுகரப் போவதாக அடம் பிடித்தது. ஒவ்வொரு சர்வதேச மாநாடுகளிலும் அடிப்படைவாத மதவாதிகளுடன் சேர்ந்து பல முற்போக்குக் கோட்பாடுகளுக்கு சவால் விட்டது. குறிப்பாக, பெண்களுக்கு மீள் உற்பத்தி உரிமைகள் (reproductive rights) வேண்டும் என்பதை, அதாவது குடும்பக் கட்டுப்பாடு செய்வதற்கும் அது தொடர்பான சுகாதார சேவைகளுக்கும் உரிமைகள் இருக்கின்றன என்பதை எதிர்த்தது. அமெரிக்க வல்லரசின் இந்த அராஜகப் போக்கை இன்று பிற அடிப்படைவாத நாடுகளும் பின்பற்றத் தொடங்கி விட்டன. இன்று மத்திய கிழக்கில் எதிரும் புதிருமாகப் போர் தொடுக்கும் நாடுகள் ஐ.நா சபையில் ஒன்றிணைந்திருக்கும் அதிசயத்தைப் பார்க்கலாம். அரசியல் என்றாலே அதுதானே. அங்கு நிரந்தர நண்பர்களும் கிடையாது, நிரந்தர எதிரிகளும் கிடையாது.

கடந்த பெண்கள் அந்தஸ்திற்கான ஆணைக்குழு அமர்வில் நிகழ்ந்த இது போன்ற சம்பவங்கள் முற்போக்கு அரசியலுக்கே சாவுமணி அடிப்பது போன்று இருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

# தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகளில் ஏன் இவ்வளவு பிளவு நிலை தோன்றியுள்ளது

கடந்த பல ஆண்டுகளில் எந்தவிதமான பாகுபாடுகளும் இன்றி தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சந்தோசமாக உண்டு உடுத்து உறங்கி ஒன்றாக வாழ்ந்த காலங்கள் இருந்தன. அதாவது பெருநாள் காலங்களில் முஸ்லிம் மக்களின் வீடுகளுக்கு தமிழ் மக்கள் போய் தங்கி நின்று வருவார்கள். இதேவேளை முஸ்லிம் மக்கள் தமிழர்களுடைய வீடுகளுக்கு தம்முடைய பெருநாள் காலங்களை கழிப்பதற்கு செல்வார்கள். தமிழர்களுடைய தைப்பொங்கல் சித்திரை வருடப் பிறப்பு போன்ற விசேட காலங்களில் தமிழ் மக்கள் விசேடமாக அழைப்பு விடுத்து முஸ்லிம் மக்களும் அவர்கள் வீடுகளுக்கு சென்று அங்கு தங்கி நின்று போவார்கள். வியாபாரத்துக்கு போகும்போது பொழுது போனால் தங்கி நின்று மறுநாள் காலையில் போவார்கள். ஒரே கிராமத்தில் தமிழ் குடும்பங்களும் முஸ்லிம் குடும்பங்களும் அன்னியோன்யமாக அன்றாடம் சமைக்கும் உணவுகளைக் கூட பரிமாறி அவர்களுக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்போது ஆளுக்காள் ஈடு செய்து இவ்வாறு சந்தோசமாகவும் வாழ்ந்துவந்த காலங்கள் உண்டு.

1985ம் ஆண்டு ஏப்ரல் மாதம் என்று கொள்கையில்லாத, அரசியல் சுயநலத்திற்காக இன்றைக்கு அரசியல் தலைமைகள் எழுந்து நின்றதோ அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களும் முஸ்லிம்களும் கீரியும் பாம்பும் மாதிரியான உணர்வுடன் துண்டாடப்பட்டனர், இவ்வாறு துண்டாடப்பட்டதால் நடந்தது என்ன தெரியுமா? ஆயிரக் கணக்கான தமிழ்ப் பெண்களும் முஸ்லிம் பெண்களும் விதவைகளாக்கப்பட்டார்கள். அன்றாடம் உழைத்து சீவியம் நடத்தி வந்த ஆண்பிள்ளைகள் தமிழ் குடும்பங்களிலும் முஸ்லிம் குடும்பங்களிலும் அழிக்கப்பட்டார்கள். ஒரே பாடசாலையில் தமிழ் பிள்ளைகளும் முஸ்லிம் பிள்ளைகளும் ஒன்றாக கல்விகற்ற காலங்கள் மறைந்து போயின. எதிர்காலங்களில் தலைவர்களாக வரக்கூடிய தமிழ் முஸ்லிம் சிறுவர்கள் அழிக்கப்பட்டார்கள். தங்களுடைய கிராமங்களில் ஒன்றாக வாழ்ந்தவர்கள் தமிழ் முஸ்லிம் எல்லைக் கோடுகளில் இடம்பெயர்ந்தார்கள். காடுகளில் விறகுகள் வெட்டி அன்றாடம் சீவித்த தமிழ் முஸ்லிம் குடும்பங்கள் அச்சத்தினால் அன்றாட சீவியம் நடத்த முடியாமல் பசி பட்டினியுடன் கஷ்டப்படுகின்றார்கள். மீன்பிடி விவசாயம் செய்கின்ற வறிய தமிழ் முஸ்லிம் குடும்பங்கள் சொத்துக்களையும் வாய்ப்புக்களையும் இழந்து வருமானமின்றி வறுமையானார்கள். இவர்களால் பயன்படுத்தப்பட வேண்டிய வளங்கள் அனைத்தும் பயன்படுத்தப்படாமல் நாசமாக்கப்பட்டன. தமிழ் முஸ்லிம் வியாபாரிகளின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. சிறிய தமிழ் முஸ்லிம் வியாபாரிகள் நடமாட்டங்கள் அடியோடு இல்லாமல் போயினர். இதனால் இவர்கள் தங்களுடைய சமூகங்கள் மத்தியிலேயே பிச்சை எடுக்க வேண்டிய நிலையில் தள்ளப் பட்டார்கள். இரு பகுதிகளிலும் ஆளுக்காள் சுதந்திரமாக பயமின்றி தொழிலில் ஈடுபட முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டது. மனித உயிர்களுக்கு பெறுமதி இல்லாத மனநிலைகள் உள்ள குழுக்கள் இவர்கள் மத்தியில் உருவாக்கப்பட்டன.

இந்தமாதிரியான விளைவுகள் தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகளை ஒரு மரத்தின் பக்கவேர்களை அறுந்து தனியே ஆணிவேர் மட்டு உள்ள நிலையில் சிறு சிறு கால இடைவெளியின் பின் ஆணிவேர் பக்க வேர்களை உருவாக்கிக்கொண்டு வரும்போது இடையிடையே தமிழ் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் பிளவுகளை தூண்டுவிக்கும் செயற்பாடுகள் இனம் தெரியாத குழுக்களால் அரசியல் வாதிகளின் மறைமுக தூண்டுகோல்களால் தூண்டப்பட்டு வருகின்றது. இந்த இடத்தில் யாருக்கு யார் பிரச்சினையைத் தீர்ப்பது என்று தெரியாத காலகட்டமாக மாறிவிட்டது.

இணைந்த கரங்கள் தமிழ் முஸ்லிம் பெண்கள் இணைந்து செயற்படுகின்ற ஒரு அமைப்பாக இருக்கின்றமையால் தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகளை கட்டியெழுப்புவது இவர்களின் வேலை யாகத்தான் இருக்க வேண்டும். இதற்காக இணைந்த கரங்கள் நிறைய வேலைகளை செய்ய வேண்டி உள்ளது. வடகிழக்கிலே வாழ்கின்ற தமிழ் முஸ்லிம் பெண்கள் எல்லாம் பெண்கள்தானே? தமிழ் முஸ்லிம் உறவுகளின் பிளவினால் இப்பெண்கள் விதவையாக்கப்படுகின்ற அவல நிலையையும் இந்த சமூகத்தில எங்கள் மத்தியிலேதான் இருக்கின்றன. இதை இல்லாமல் பண்ணுவதற்கு நாங்கள் செய்ய வேண்டியது என்ன? இன்னும் காத்திருக்க நேரமில்லை.

திருமதி சந்திரா யவனராஜ், தடாகம்

படிப்பகம்